**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**அலகு பரீட்சை-03 (2021)**

**பரதநாட்டியம்** **தரம் -10**

**தயாரிப்பு :- செல்வி .R.புவிதா ( கே / தெஹி / களனி த.வி )**

**01)மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. பின்வரும் இசைக் கருவிகளின் நரம்புக்கருவியானது.
   1.மிருதங்கம் 2. வீணை 3.புல்லாங்குழல் 4. தாளம்
2. சிரத்தா என்பதன் கருத்து
   1.வேகம் 2. வடிவம் 3.உறுதி 4. ஆர்வம்
3. தித் தெய்ந்த தாதெய் அடவு அமைந்துள்ள தாளம்.
   1. ரூபகம் 2. ஆதி 3. சாபு 4. ஏகம்
4. திமிரி என்றழைக்கப்படும் வாத்தியம்
   1. வயலின் 2. உடுக்கு 3. மிருதங்கம் 4. தவில்
5. ஒரு தாளத்தினை ஒரு முறை முழுமையாக போடுதல்.
   1. லகு 2. த்ருதம் 3. ஆவர்த்தனம் 4. அங்கம்
6. தெய் தெய் ததா அடவு அமைந்துள்ள நடை
   1. கண்டநடை 2. திஸ்ரநடை 3. சதுஸ்ரநடை 4. சங்கீர்ணநடை
7. கைகளில் செம்பு பந்து முதலான பொருட்களை ஏந்தி ஆடும் நடனம்.
   1. கும்மி 2. குறத்தி 3. ஏந்தல் 4. காவடி
8. ஜாதி பேதங்களில் மாற்றமடையும் தாள அங்கம்
   1. த்ருதம் 2. லகு 3. அங்கம் 4. அனுத்ருதம்
9. தவில் வாசிக்க பயன்படும் கழி செய்யப்படும் மரங்களில் ஒன்று
   1. பூவரசு 2. வேம்பு 3. மா 4. பலா
10. **1100** இக் குறியீடு குறிக்கும் தாளம்.
    1. ஜம்பைதாளம் 2. ஏகதாளம் 3.அடதாளம் 4.ரூபகதாளம்

**02)சுருக்கமான விடை தருக.**

11. நாட்டிய உருப்படி வரிசையில் முதலாவதாக இடம்பெறுவது?
12. “ சமுஹாகமனே” என்றால் என்ன?
13. அலாரிப்பின் இரு பகுதிகளும் எவை?
14. கிடதகதரிகிடதொம் அடவின் மறு பெயர்?
15. தெய் தெய் தாம் அடவின் தாளம் என்ன?